

ஸ்ரீ காஞ்சீ காமகோடி மூலாம்நாய ஸர்வஜ்ஞ பீடம் பஞ்சாங்க ஸதஸ்

## **ப்லவ ளூ வைகாசி மீ பௌர்ணமி (2021-மே-26)**

## **சந்த்ர க்ரஹணம் குறித்த அறிக்கை**

வைகாசி மீ 8 உ ஶுக்ல ஏகாதசி (2021-மே-22)

பொதுவாக அனைத்து பஞ்சாங்கங்களிலும் ப்லவ ளூ க்ரஹணங்கள் எதுவும் கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி வருடாரம்ப பஞ்சாங்க படன நிகழ்ச்சிகளிலும் அவ்வாறே சொல்லப்பட்டது. சில பஞ்சாங்கங்களில் வடகிழக்கு பாரதத்தில் க்ரஹணம் உண்டு என்ற குறிப்பு உள்ளது. அண்மையில் ஊடகங்களிலும் க்ரஹணம் உண்டு என்ற தகவல் வெளிவந்துள்ளதால் இதை குறித்த குழப்பத்தை நீக்க இந்த விளக்கம் வெளியிடப்படுகிறது.




வலது புறம் கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தின்படி பாரதத்தின் சில வடகிழக்கு பகுதிகளில் (கறுப்பு இல்லாத இடங்கள்) க்ரஹணம் காணப்படலாம் என்பது உண்மை. பாரதத்தின் மற்ற பகுதிகளில் க்ரஹணம் தெரியாது ஆகையால் க்ரஹண அனுஷ்டானம் கண்டிப்பாக கிடையாது.

இந்த வடகிழக்கு ஊர்களிலும் க்ரஹணம் க்ரஸ்தோதயமாக ஏற்பட்டு 18:22 மணிக்கு முடிந்து விடுகிறது. ஆனால் 18:22 க்கு மிக நெருங்கி சந்த்ர உதயம் ஏற்படும் ஊர்களில் க்ரஹண காலமும் அதற்கேற்ப க்ரஹண ப்ரமாணமும் மிக ஸ்வல்பமாக இருப்பதால் அவ்வூர்களில் இந்த க்ரஹணம் அனுஷ்டானத்திற்கு ஏற்புடையதாகாது.

ஸூர்ய ஸித்தாந்தம் சேத்யக அதிகாரத்தில் 13ம் செய்யுளில் “சந்த்ரனின் பன்னிரண்டில் ஒரு பங்கு மட்டுமே க்ரஸ்தமானால் தெரியாது” என்றுள்ளது. அதாவது 8.3% பங்குக்கு குறைவான க்ரஹணம் இருந்தால் தெரியாது.

தற்சமயம் வரும் பௌர்ணமி அன்று கொல்கத்தாவில் சந்த்ரன் 18:20 க்கு உதயமாகிறார். அப்போது அவரது க்ரஹண ப்ரமாணம் 4.6%. காற்று மண்டலத்தின் நிலையைப் பொறுத்து வக்ரீகரணம் என்ற ஒரு காரணத்தால் 18:14 வரை முன்னதாகவே உதயம் தெரியலாம். அப்போது க்ரஹண ப்ரமாணம் சற்று அதிகமாக இருக்கும். ஆகவே கொல்கத்தாவில் க்ரஹணம் தெரிவதற்கு வாய்ப்பு குறைவு, ஆனால் சிறிதளவு உள்ளது. மேற்கூறியபடி சற்று சீக்கிரம் சந்த்ர உதயம் ஏற்பட்டு கண்ணால் பரீக்ஷித்து க்ரஹணம் தென்பட்டால் அனுஷ்டிக்கலாம். இல்லாவிடில் அனுஷ்டானம் கிடையாது.

ஆனால் இதைக்காட்டிலும் வடகிழக்கில் உள்ள காமரூப (அஸ்ஸாம்) ராஜ்யத்தின் ஊர்களில் சீக்கிரமாகவே சந்த்ர உதயம் ஏற்படுகிறது. ஆகவே அவ்வூர்களில் க்ரஹணம் அனுஷ்டிக்கும்படி உள்ளது.

| **ஊர்** | **சந்த்ர உதயம்** | **க்ரஹண ப்ரமாணம்** |
|---|---|---|
| குவஹாத்தி | 18:12 | 15.5% |
| ஷில்லாங் | 18:10 | 18.4% |
| அகர்தாலா | 18:10 | 20.0% |
| தேஜ்பூர் | 18:09 | 20.3% |
| இடாநகர் | 18:06 | 24.4% |
| ஜோர்ஹாட் | 18:03 | 29.2% |
| திப்ருகர் | 18:02 | 31.4% |
| கோஹிமா | 18:01 | 32.0% |
| இம்பால் | 18:00 | 33.5% |

(வக்ரீகரணத்தால் ஷ காலங்களை விட இன்னும் சீக்கிரமாக உதயம் ஏற்படலாம்.)

க்ரஸ்த உதயம் ஆகியபடியால் இவ்வூர்களில் முந்தைய பகலில் போஜனம் கிடையாது. ஸூர்ய அஸ்தமனத்திற்கு முன்பே ஸாயம் ஸந்த்யா அர்க்யம் கொடுத்துவிடவேண்டும். சந்த்ர உதயம் முதல் க்ரஹண முடிவாகிய 18:22 மணி வரை க்ரஹண புண்ய காலம். இதற்குள் ஸ்நானம், தர்ப்பணம், தானம் முதலிய க்ரஹண அனுஷ்டானங்களை யதாசக்தி செய்து க்ரஹணம் முடிந்தவுடன் மோக்ஷ ஸ்நானம் செய்ய வேண்டியது. பிறகு மற்ற மாலை அனுஷ்டானங்களை செய்ய வேண்டும். அதன் பிறகு போஜனம் செய்யலாம்.

இப்படிக்கு,<br>
பஞ்சாங்க ஸதஸ் நிர்வாஹம்,<br>
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்.